தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண். 756/டி1/2021, நாள்.18.07.2022

பொருள் : தொடக்கக் கல்வி – பொது மாறுதல் கலந்தாய்வு 2021 – 2022 ஆசிரியர்களின் மனமொத்த மாறுதல் – 28.02.2022 அன்று விண்ணப்பங்களைப் பெற்று கலந்தாய்வு நடத்துதல் – ஒன்றியத்திற்குள் / மாவட்டத்திற்குள் மாறுதல் ஆணை வழங்குதல் மற்றும் விடுவித்தல், மலைசுழற்சி முறை பின்பற்றப்படும் ஒன்றியங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் தவிர்த்து பிற மாவட்டங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது – தற்போது மலை சுழற்சி முறை பின்பற்றப்படும் ஒன்றிங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு 19.07.2022 அன்று ஒன்றியத்திற்குள் / மாவட்டத்திற்குள் மனமொத்த மாறுதல் ஆணை வழங்கி பணியில் இருந்து விடுவிக்க அறிவுரை வழங்குதல் – சார்பு.

பார்வை

1. சென்னை-6, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.756/டி1/2021, நாள்.05.02.2021, 06.01.2022 மற்றும் 28.02.2022
2. அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வி (ப.க5(1)துறை, நாள்.17.12.2021
3. சென்னை -6 பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.கஎண்.25154/அ1/இ1/2021, நாள்.30.12.2021 மற்றும் 23.02.2022

பார்வையில் கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றி 2021-2022 ஆம் கல்வியாண்டில் அரசு ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இணைய வழியில் EMIS மூலம் பொது மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நிரவல் கலந்தாய்வு பணிகள் 21.01.2022 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக மலை சுழற்சி முறை பின்பற்றப்படும் ஒன்றிங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் தவிர்த்து பிற மாவட்டங்களுக்கு மேற்படி அரசாணையின் வ.எண்.( 6)-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி, ஆசிரியர்களின் மனமொத்த மாறுதல் விண்ணப்பங்களை 28.02.2022 முற்பகல் பெற்று, பரிசீலனை செய்து அன்று பிற்பகல் ஒன்றியத்திற்குள் மற்றும் மாவட்டத்திற்குள் மனமொத்த மாறுதல் ஆணைகள்

வழங்கிட பார்வை 1-ல் காணும் 28.02.2022 நாளிட்ட இவ்வியக்கக செயல்முறைகளின் மூலம் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது மலைச்சுழற்சி முறை பின்பற்றப்படும் மாவட்டங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு 19.07.2022 அன்று ஒன்றியத்திற்குள் / மாவட்டத்திற்குள் பார்வை (2)-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளின்படி மனமொத்த மாறுதல் ஆணை வழங்கி பணியில் இருந்து விடுவித்து உடன் பணியில் சேரும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

15-7-22

பெறுநர் :

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
ஈரோடு, சேலம், தேனி, திண்டுக்கல், வேலூர், திருப்பத்தூர், தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி.